**01.02.2021 அ.வ.எண். 96/2017 வா.சா. 1 சேகர்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அவஎண். 117/2015 ல் அவர்கள் எனக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளனர் என்றால் சரிதான். அவ்வாறு அவர்கள் வழக்கு தாக்கல் செய்து 2 வருடங்கள் கழித்துதான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவஎண். 117/2015 சம்மந்தமான வழக்கு சொத்தில் நெற்பயிர் பயிர் செய்துள்ளனர். நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்து கரம்பாகதான் இருந்தது. பிரதிவாதிகள் எனக்கு பாகமாக கொடுக்கப்பட்ட நிலத்திலும் சேர்த்து பயிர் வைத்து அறுவடை செய்து விட்டனர். அவ்வாறு பயிர் வைத்தது சம்மந்தமாக எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் புகார் அளித்தனர். தாவா சொத்து 19.10.2000 அன்று ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவஎண். 117/2015 வழக்கில் வழக்கு சொ்த்து சம்மந்தமான பட்டா எனது அண்ணன் 1ம் பிரதிவாதி பெயரில் இருந்து வருகிறது. தாவா சொத்துக்கள் ஆதியில் ஜீவரத்தினம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அவர் எங்களது தாய்வழி பாட்டி ஆவார். 1ம் பிரதிவாதி பிறந்தது முதல் வாய்பேசமுடியாமல் இருந்து வருகிறார் என்றும், 1ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட நிலங்களை அவரது மனைவி 2ம் பிரதிவாதிதான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். 2000ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினைக்கு பிறகுதான் ஜீவரத்தினம்மாள் இறந்துபோனார் என்றால் சரிதான். அந்த பாகப்பரிவினை எனது தந்தை வழியாக வந்த சொத்துக்கள் சம்மந்தமாக எனக்கும், எனது தாய் சரஸ்வதியம்மாள் எனது அண்ணன் 1ம் பிரதிவாதி, ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்டதாகும். எனது தாயாருக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட நிலங்களின் சர்வே எ ண் எனக்கு தெரியாது. ஆனால் அவருக்கு 1 ஏக்கர் நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டது. 2001ம் ஆண்டு எனது தாயார் சரஸ்வதியம்மாள் இறந்துபோய்விட்டார். எனது அம்மாள் உயிரோடு இருந்த சமயத்தில் அவரது மருத்துவ செலவினங்களை எனது தங்கை மற்றும் அவரது கணவர் பார்த்து வந்ததால் எனது தாயார் அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் நிலத்தை எனது சகோதரி மதியழகியின் கணவர் உதயகுமார் அடையவேண்டுமென உயில் ஒன்றை எழுதி வைத்தார். எனது தாயார் இறப்பிற்கு பின்பு அந்த 1 ஏக்கர் நிலத்தை அவர்கள் அடைந்து அதை விற்பனை செய்துவிட்டனர். பாகப்பிரிவினையில் தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களும் தாவா சொத்துக்கள் அமைந்துள்ள சர்வே எண்களில் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் சம்மந்தமாக எனது சகோதரர் 1ம் பிரதிவாதி விஜயகுமார் என்பவர் பெயரிலும் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் சம்மந்தமாக எனது பெயரிலும் தவறாக பட்டா வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என கூறி அவர் அதில் பயிர் வைக்க முயற்சித்தார். எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட வேறு சொத்துக்கள் சம்மந்தமாக எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. கடந்த வருடம் தாவா சொத்துக்களில்

பிரதிவாதிகள் அத்துமீறி பிரவேசித்து பயிர் செய்து அறுவடை செய்தனர். அதற்கு முன்பு தாவா தாக்கல் செய்த சமயத்தில் பிரதிவாதிகள் எனக்கு பாகமாக கொடுக்கப்பட்ட நிலத்தில் நான் பயிர் செய்ய முடியாதவாறு இடையூறு செய்தனர். அதற்கு முன்பாக பிரதிவாதிகள் தாவா சொத்தில் பயிர் செய்து இடையூறு செய்யவில்லை. 2001ம் வருடம் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டது குறித்து எனக்கு தெரிய வந்தது. தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டதை குறித்து நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்தேன். ஆனார் விசாரணை மேற்கொள்ளவில்லை. நான் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டதை குறித்து பிரதிவாதிகளிடம் தெரிவித்து அவர்களை அழைத்தேன். ஆனால் அவர்கள் அதை சரிய செய்ய வரவில்லை. 2001ம் வருடத்திலிருந்து இந்நாள் வரை தாவா சொத்துக்கள் சம்மந்தமான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் இருந்து வருகிறது என்றால் சரிதான். 2015ம் வருடம் அவர்கள் வழக்கு தாக்கல் செய்த பின்பு தாவா சொத்துக்கள் சம்மந்தமான வரிகளை செலுத்தி வருகிறார்கள். அதற்கு முன்னமாக நான்தான் வரிகளை செலுத்தி வந்தேன். நான் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டதை குறித்து வருவாய் கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களிடமும் மனு அளித்தேன். அவ்வாறு நான் 2016, 2017 வருடத்தில் மனுக்கள் அளித்தேன். அவ்வாறு நான் தொடர்ந்து மனு கொடுத்துவருகிறேன். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த மனுக்களின் நகல்கள் என்னிடம் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். 2016, 2017 வருடத்தில் நான் தாவா சொத்துக்களில் கரும்பு பயிர் செய்தேன். அவர்கள் என்னை பயிர் செய்யவிடாமலும், பயிர் செய்வது சம்மந்தமான நான் வங்கியில் கோரியிருந்த ரூ. 1,00,000/- கடனை பெறமுடியாமல் செய்தனர். நான் குறிப்பாக மேற்சொன்னவாறு பிரதிவாதிகள் தடை செய்ததாக நான் தாக்கல் செய்துள்ள பிராதில் குறிப்பிட்டுள்ளேன். நான் சொன்னவாறு பிரதிவாதிகள் தாவா சொத்தில் நான் அனுபவித்து வருவதில் எவ்விதத்திலும் தடை செய்யவில்லை என்றும் அதனால்தான் நான் குறிப்பாக பிரதிவாதிகள் எவ்வாறு என் அனுபவத்தை தடை செய்தனர் என எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் 4ம் பிரதிவாதி செஞ்சியில் வசித்து வருகிறார். 5ம் பிரதிவாதி கூத்தவேடு கிராமத்தில் வசித்து வருகிறார். 1, 2 பிரதிவாதிகள் மட்டுமே நான் தாவா சொத்தை அனுபவிப்பதை தடை செய்தனர். 3 முதல் 5 பிரதிவாதிகள் காவல் நிலையத்தில் விசாரணையின் போது அவர்களுக்கு துணையாக வருவார்கள். 1ம் பிரவாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட நிலங்களை அவர்கள் விற்பனை செய்து அவர்கள் மகள் 3ம் பிரதிவாதிக்கு திருமணம் செய்து வைத்துவிட்டு எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட நிலங்களை தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டதை அனுகூலமாக கொண்டு பிரதிவாதிகள் எனது அனுபவத்தை தடை செய்து வருகின்றனர். நான் சொன்னவாறு, பிரதிவாதிகள் எவ்விதத்திலும் எனது அனுபவத்தை தடை செய்யவில்லை என்றும், தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டது சம்மந்தமாக நான் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தவறான சங்கதிகளை குறிப்பிட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது தாவா சொத்துக்கள் எனது தாய் வழிப்பாட்டி ஜீவரத்தினம்மாள் எழுதி வைத்த உயில் மூலம் கிடைத்த சொத்துக்கள் என்றும் உயில் மூலம் 1ம் பிரதிவாதிக்கு குறைவான சொத்துக்கள் கிடைக்கப்பெற்றதாக கூறி பிரதிவாதிகள் தாவா சொத்தை தனது அனுபவத்தில் தடை செய்து வருவதாகவும் 2000ம் வருடம் ஏற்பட்ட

பாகப்பிரிவினைக்கும் தாவா சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 2000ம் வருடம் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்துக்கள் எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். குறிப்பாக எனது தாய் வழிப்பாட்டி ஜீவரத்தினம்மாள் எழுதி வைத்த உயிலின் மூலம் நான் அடைந்த சொத்துக்கள் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 19.10.2000 ம் அன்று பாகப்பிரிவினையில் எனக்கு சி செட்யுல் சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது. அவ்வாறு ச.எண். 85/1ல் 50 சென்ட் ச.எண். 85/2ல் 16 சென்ட் ச.எண். 82/1ல் 50 சென்ட் அதன் புதிய ச.எண். 82/1டி. ச.எண். 91/5சில் 20 சென்ட் நிலம், ச.எண். 71/டி ல் 5 ஏக்கர் 91 சென்ட், ச.எண். 96/2ல் கீழ்ப்புறப்பாதி 310 1/2 சதுரடி , ச.எண். 99/2 ல் 258 சதுரடி அளவுள்ள காலி மனை ஆகியவை மட்டுமே எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனவே தாவா சொத்துக்கள் எனக்கு மேற்சொன்ன பாகப்பிரிவினையில் பாகமாக ஒதுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது என்றால் சரிதான். எனவே தாவா சொத்துக்கள் எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பது சம்மந்தமான விவரங்களை நான் தவறாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றும், தாவா சொத்துக்களை நான் அனுபவித்து வருவதை பிரதிவாதிகள் ஒதுபோதும் தடைசெய்யவில்லை என்றும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர்கள் அனுபவித்து வருவதை நான் தடைசெய்வதால் அவர்கள் அவஎண். 117/2015 ஐ தாக்கல் செய்துள்ளனர் என்றும் பிரதிவாதிகளை துன்புறுத்தும் வகையில் தவறான சங்கதிகளை கூறி நான் இவ்வழக்கை தாக்கல் செய்தள்ளேன் என்றும் எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் சம்மந்தமான பட்டாக்கள் எனது பெயரில் சரியாக வழங்கப்பட்டுள்ளது என்றும் அது சம்மந்தமாக வழங்கப்பட்டுள்ள வா.சா.1 முதல் வா.சா.3 வரையிலான சிட்டா அ பதிவேடு மற்றும் வரி ரசீதுகள் சரியானவை என்றால் சரிதான். தாவா சொதததுக்களுக்கும் தவறாக பட்டா மாற்றம் செய்யப்பட்டதற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை- இல்லை.